நகராட்சி அலுவலகம் 17 JUL 2020 வெள்ளகோவில்

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**அனுப்புதல்**
திரு. க.குமார்,எம்.ஏ.,
உதவி இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
குமரன் வணிக வளாகம், 2–வது தளம்,
குமரன் சாலை, திருப்பூர். – 1.

**பெறுதல்**
ஆணையாளர்,
வெள்ளகோவில் நகராட்சி,
திருப்பூர் மாவட்டம்

ந.க.எண்.0213/ த1 / 2019, நாள்: 10.06.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051 ஸ்ரீசார்வரி வருடம் வைகாசித் திங்கள் 28ம் நாள்

அய்யா

**பொருள் :** தணிக்கை அறிக்கை – வெள்ளகோவில் நகராட்சியின் – 2018–19ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதிக் கணக்குகள் மற்றும் அனைத்து நிதிகளுக்கான தணிக்கை அறிக்கை வெளியிடுதல் – குறித்து

**பார்வை :** 1) அரசாணை எண். 87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 05.03.2002
2) அரசாணை எண். 145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (எம்ஜி2) நாள். 22.10.2002.

********

பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையின்படி திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சியின் 01.04.2002 முதல் இயல்புநிலை கணக்குகள் வைப்புமுறை செயல்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் இந்நகராட்சியின் வருவாய் (ம) மூலதன நிதி, மத்திய அரசு வேலை வாய்ப்புத் திட்ட மற்றும் இதரக் கணக்குகளுக்கான 2018–19ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட வருவாய் செலவுக் கணக்கு மற்றும் 31.03.2019 அன்றைய ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இதர கணக்குகளுக்கான வரவு செலவு கணக்குகளின் நகல்களுடன் இரு நகல்களில் அனுப்பி வைக்கப்படுகிறது.

பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி இத்தணிக்கை அறிக்கையினை நகராட்சி மன்றத்தின் பார்வைக்கு வைத்து இத்தணிக்கை அறிக்கை கிடைத்த இரு மாதங்களுக்குள் பதில்களை இவ்வலுவலகத்திற்கு மன்ற அனுமதி பெற்று மூன்று நகல்களில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கை,
திருப்பூர்

**இணைப்பு**
2018–19–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை ஆண்டு கணக்குகளுடன்

**நகல்**
1) இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, கோவை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4) நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர்.

Scanned with OKEN Scanner